இயேசு கிறிஸ்துவின் அருளும் சமாதானமும் அனைத்து தமிழ் கிறித்தவ சகோதர சகோதரிகளுக்கும் உரிதாக்கிக் கொள்கிறேன்.

உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளிலிருந்து தமிழர்களாய் இங்கு ஒன்று கூடி வாழ்கிறோம். திருப்பலி கொண்டாட்டங்களிலும், இறையருளை பகிர்வதிலும், ஒரே குழுமமாய், தாய் மொழியில் தமிழ் வளர்க்கவும், தலைவன் இயேசுவின் வழி நடக்கவும், நாம் எடுக்கும் இத்தகைய சிறு சிறு முயற்சிகளை பாராட்டுவோம்.

முன்பு நாம் ஒரு மக்களினமாய் இல்லை; இப்பொழுது கடவுளுடைய மக்களாக இருக்கிறோம். முன்பு இரக்கம் பெறாதவர்களாய் இருந்தோம்; இப்பொழுதோ இரக்கம் பெற்றுள்ளோம் (1பேதுரு 2:10) என்னும் நன்றியுணர்வோடு ஒவ்வொரு முறையும் ஒன்று கூடி வருவோம்; இறைவனையும், இயலாதவரையும் அன்பு செய்து, இருப்பவற்றை இல்லாதவரோடு ஈன்று, தாகத்தோடு தடம் மாறிப்போன இளைஞர்களுக்கும், தஞ்சம் தேடி தாவி வரும் முதியவர்க்கும் முடிந்தவரை உதவிட முயற்சிப்போம். இவ்வாறு, தந்தை கடவுளும் மகன் இயேசு கிறிஸ்துவும் ஒன்றாய் இருப்பதுபோல் நாம் அனைவரும் ஒன்றாய் இருப்போமாக! (யோவான் 17:21)

இறையாசீர்

பணி. றொனால்டு